மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 104/25

வா.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: முத்துபாண்டி | தேதி : 16.03.26 |
| வயது : | த/பெ : வேம்பு |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

**16.03.26 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 4 ம் வாதி மற்றும் வாதிகள் தரப்பு 2 ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை மதியத்திற்கு ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.16 19:55:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 104/25
வா.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: முத்துபாண்டி — தேதி : 16.03.26
வயது : — த/பெ : வேம்பு
கிராமம் : — தொழில் :
மாவட்டம்:

---

<u>16.03.26 குறுக்கு விசாரணை</u>

1.நான் 1ம் வாதி பேச்சியம்மாளுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். வழக்குரையில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆம். வழக்கு பற்றி முழு விபரம் தெரியும். யாருக்கு எதிராக வழக்கு போட்டுள்ளோம் என்றால் வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு எதிராக வழக்கு போட்டுள்ளோம். என் அப்பா வேம்புவின் இறப்பிற்கு வாரிசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

2.என் அப்பாவின் தந்தை பெயர் வேலாயுதம். என் அப்பாவின் அம்மா பெயர் பேச்சி. இருவரும் உயிருடன் உள்ளனரா என்றால் இல்லை. என் அப்பாவிற்கு 2 மனைவிகள். முதல் மனைவி பெயர் பாப்பா. 2ம் மனைவி பெயர் பேச்சியம்மாள். என் அப்பா பாப்பாவை எந்த வருடம் திருமணம் செய்தார் என்றால் தெரியாது. என் அப்பாவுக்கும், பாப்பாவுக்கும் இடையேனா திருமணத்தின் பயனாக குழந்தைகள் கிடையாது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.16 19:55:51 +0530

3.பாப்பா இறந்துவிட்டார். எப்போது இறந்தார் என்று தெரியாது. எங்கு வைத்து இறந்தார் என்று தெரியாது. என் அப்பாவுக்கும், என் அம்மாவுக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் பாப்பா இறந்து 6 மாதங்கள் கழித்து திருமணம் நடந்தது. தேதி தெரியாது. என் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் 3 குழந்தைகள். அவர்கள் பாபுகுமார், முத்துக்கனி மற்றும் நான் ஆவோம். பாபுகுமார் தூத்துக்குடியில் உள்ளார். முத்துக்கனி செய்துங்கநல்லூரில் உள்ளார். நான் கீழதூதுக்குழியில் வசித்து வருகிறேன்.

4.1ம் வாதியான என் தாயார் பேச்சிம்மாள் என்னுடன் வசித்து வருகிறார். என் அப்பா 06.06. 2007ல் வீட்டில் வைத்து இறந்தார். என் அப்பா பாப்பா உயிருடன் இருக்கும்போதுதான் 1ம் வாதியை திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. என் அப்பா என் அம்மாவை பாப்பா உயிருடன் இருக்கும் போது திருமணம் செய்யவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவின் வாரிசு சான்று வீடு என் அப்பா பெயரில் உள்ளதாலும், அரசு நிறுவனங்களில் விண்ணப்பம் செய்யும் வகைக்கும் தேவைப்படுகிறது.

5.என் அப்பாவுக்கு 1ம் வாதி வாரிசு ஆகமாட்டார் என்றால் சரியல்ல. நாங்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் கட்சி கிடையாது என்றால் சரியல்ல. நான் 1ம் வாதியுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்யாததால் தான் வழக்குரையில் என் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கினை 1ம் வாதி மட்டும் தான் தாக்கல்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.16 19:55:54 +0530

செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் 1ம் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6.என் அப்பாவுக்கு 1ம்வாதி வாரிசு ஆகமாட்டார் என்பதால் தான் நாங்கள் வழக்கு தாக்கல் செய்ய முன்வரவில்லை என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.16 19:55:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.